

கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.4.2026) சேலத்தில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்த போது, அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கமல்ஹாசன், சேலம் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.4.2026) சேலத்தில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கமல்ஹாசன் ஆகியோருடன் இணைந்து பேரணியாக சென்று சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

# ‘ரெஸ்ட்’ இல்லாமல் உழைக்கும் பெண்களுக்கு நமது அரசு தரும் ‘ரெஸ்பெக்ட்’தான் உரிமைத் தொகை!

## சேலத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 5–ஆம் பக்கத் தொடர்ச்சி!



வீட்டில் இருக்கும் நம்முடைய பெண்கள் எப்போதுமே, தான் சாப்பிடவில்லை என்றாலும், மற்றவர்கள் சாப்பிட்டாலே போதும் என்று நினைப்பார்கள். ஞாயிற்றுக்கிழமை கறி வாங்கினால்கூட, கணவர், பிள்ளைகள் சாப்பிடட்டும் என்று நினைப்பார்கள். யதார்த்தத்தைச் சொல்கிறேன்.

ஆனால், அப்படி இருக்காதீர்கள். நீங்களும் நன்றாகச் சாப்பிட்டு ஸ்ட்ராங்காக இருக்க வேண்டும். பெண்களான நீங்கள் ஸ்ட்ராங்காக இருந்தால்தான், நம்முடைய தமிழ்நாடும் ஸ்ட்ராங்காக இருக்கும்.

**விடியல் பயணத்திட்டத்தால் பெண்களின் பேருந்துப் பயணம் அதிகரிப்பு!**

அதுமட்டுமல்லாமல், பெண்கள் பேருந்தில் பயணிப்பதும் இதனால் அதிகரித்திருக்கிறது. புள்ளிவிவரத்தோடு சொல்ல வேண்டும் என்றால், விடியல் பயணம் திட்டம் வந்த பிறகு, பேருந்துகளில் பெண்கள் பயணிப்பது, 40 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. நினைத்தால் நினைத்த இடத்திற்கு, யாரையும் எதிர்பார்க்காமல் என் சகோதரிகள் பயணிக்கிறார்கள்.

அதிகாரிகள் கூடுதல் செலவினம் என்று சொன்னார்கள். நான் சொன்னேன். இது செலவினம் இல்லை. நமக்குக் பிடித்தவர்களுக்காக நாம் பண்ணும் எதையும் செலவாக - சுமையாக கருதக் கூடாது! நம்முடைய சகோதரிகள், நம்முடைய மகள்கள் சுதந்திரமாகப் பயணிக்க வேண்டும்; நன்றாகப் படிக்க வேண்டும்; வேலைகளுக்குப் போக வேண்டும்; கை நிறையச் சம்பாதிக்க வேண்டும். அதற்கு நாம் செய்யும் முதலீடு இது. இதற்காக எத்தனை ஆயிரம் கோடி ஆனாலும் பரவாயில்லை என்று நான் சொல்லிவிட்டேன்.

அடுத்து, அமையவிருக்கும் நம்முடைய ஆட்சியில் இன்னும் கூடுதலாக பேருந்துகளை நாம் வாங்குவதற்கு திட்டமிட்டு, அதை விரிவுபடுத்தப் போகிறோம்.

அடுத்து, முக்கியமானத் திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! 2021இல் நாம் பெற்ற மாபெரும் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது இந்தத் திட்டம்! ஆகவே, இந்தத் திட்டத்தைப் பற்றி நான் அதிகம் உங்களிடத்தில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இதை நிறைவேற்றவே முடியாது என்று நிறைய பேர் சொன்னார்கள். சவால் விட்டார்கள். நான் நிறைவேற்றிக் காட்டினேன்! நிறைவேற்றிக் காட்டியது மட்டுமல்ல, திராவிட மாடல் 2.0வில் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் போகிறேன்.

**பெண்களின் உழைப்பு இல்லாமல் மனிதச் சமூகம் இல்லை!**

இந்தப் பணத்தை உதவித்தொகை என்று சொல்லாமல், உரிமைத்தொகை என்று மிகவும் பர்ட்டிகுலராக நான் அந்தப் பெயரைச் செலக்ட் பண்ணினேன்! ஏனென்றால், பெண்களின் உழைப்பு இல்லாமல், மனிதச் சமூகம் இல்லை! அதுவும், இந்தியா போன்ற விவசாயம் நிறைந்த நாட்டில், பெண்கள்தான் அந்த விவசாய வேலையில் அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதுவும், வீட்டில் நம்முடைய பெண்கள் உழைக்கும் உழைப்பு, சாதாரண உழைப்பு இல்லை! எல்லோருக்கும் முன்னால் யார் எழுந்திருக்கிறார்கள்? பெண்கள்தான் காலையில் எழுந்திருக்கிறார்கள். வீட்டைப் பெருக்கி, தெருவில் தண்ணீர் தெளித்துச் சுத்தம் செய்கிறார்கள். குளித்துவிட்டு, டீயோ, காபியோ போட வேண்டும், குழந்தைகளை ஸ்கூலுக்கு ரெடி பண்ணி அனுப்ப வேண்டும், சமைக்க வேண்டும், சமைப்பதை விடப் பெரிய தொல்லை என்ன சமைப்பது என்று ஒவ்வொரு வேளையும் யோசிப்பது, அடுத்த தொல்லை, பாத்திரம் கழுவுவது. அப்படியே பாத்திரத்தை போட்டு வைக்காமல் கழுவி, அதை கவிழ்த்து, சாய்த்து வைத்தால்தான் பல பெண்களுக்கு நிம்மதி. சரிதானே?

இது முடிந்ததும், துணியைத் துவைத்து, காயப்போட்டு, மடித்து வைக்க வேண்டும். மழைக்காலம் என்றால் இன்னும் கஷ்டம். அதில்கூட வீட்டில் இருக்கும் ஆண்கள் சட்டை, பேண்ட் எல்லாம் அப்படியே போட்டுவிடுவார்கள். பாக்கெட்டில் எதாவது இருக்கிறதா என்று பெண்கள்தான் செக் பண்ணிவிட்டு பிறகு துவைக்க வேண்டியிருக்கும். வீட்டில் பெரியவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை எல்லாம் வாங்க வேண்டும். எந்தக் காய்கறி, எவ்வளவு விலை விற்கிறது என்று பார்த்து, குடும்ப பட்ஜெட்டுக்கு ஏற்ற மாதிரி அனைத்தையும் வாங்க வேண்டும்.

மாவு அரைத்து வைக்க வேண்டும், மிளகாய் காய வைக்க வேண்டும், தண்ணீர் பிடித்து வைக்க வேண்டும், பிள்ளைகளை ஹோம் வொர்க் பண்ண வைக்க வேண்டும். அடேங்கப்பா... இதையெல்லாம் சொல்லும்போதே எனக்கே டயர்டாகிவிட்டது. அப்போது இதையெல்லாம் செய்வது எவ்வளவு கஷ்டம்!

**குடும்பங்கள் சிறப்பாக இயங்க பெண்களின் உழைப்பே காரணம்!**

இதெல்லாம் செய்துவிட்டு ஆபிசுக்கோ, தொழிற்சாலைகளுக்கோ, வேறு வேலைக்களுக்குச் செல்லும் பெண்களும் நிறைய பேர் இருக்கிறார்கள். சமூகத்தில் கூலித் தொழிலாளராக இருந்தாலும், டீச்சராக இருந்தாலும், அரசு ஊழியராக, I.T. ஊழியராக இருந்தாலும் நான் இப்போது சொன்ன வீட்டு வேலைகளில் இருந்து பெண்களுக்கு ரெஸ்ட் இருக்காது. இவர்கள் அனைவரும் ஒரே ஒரு நாள் ஸ்டிரைக் பண்ணால்கூட, பல குடும்பங்கள் இயங்காது! எந்த ஆணாலும் நிம்மதியாகத் தன்னுடைய வேலையைச் செய்ய முடியாது!

ஆனால், “உங்க மனைவி என்ன பண்றாங்க?” என்று கேட்டால், பல பேர் மிகவும் சாதாரணமாக “வீட்டுல சும்மாதான் இருக்காங்க” என்று சொல்லிவிடுவார்கள். இதை மாற்ற வேண்டும், பெண்கள் இந்தச் சமூகத்திற்கும் குடும்பங்களுக்கும் செய்யும் பங்களிப்பை அங்கீகரிக்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்டதுதான் உரிமைத்தொகை என்று நான் அழுத்தம் திருத்தமாக குறிப்பிடுகிறேன்!

ஆயிரம், இரண்டாயிரம் என்பதைத் கடந்து, ‘ரெஸ்ட்’ இல்லாமல் உழைக்கும் நம்முடைய பெண்களுக்கு இந்த அரசு தரும் ‘ரெஸ்பெக்ட்’ தான் உரிமைத்தொகை! முடியவே முடியாது என்று சொன்ன திட்டம், இன்றைக்கு ஒரு கோடியே 31 இலட்சம் பெண்களுக்குக் கிடைக்கிறது!

**புதுமைப் பெண் எனும் புரட்சிகரத் திட்டம்!**

**அடுத்து அமையும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில், ஆயிரம் ரூபாய் என்பது 2 ஆயிரம் ரூபாயாக உயரப் போகிறது. தேவைப்படக்கூடிய பயனாளிகளின் எண்ணிக்கையும் கண்டிப்பாக உயரும்!**

**இதேபோன்று, மற்றுமொரு புரட்சித் திட்டம் புதுமைப்பெண் திட்டம்! பெண்கள் உயர்கல்வியில் சேர்வது, அதுவும், கிராமப்புற அரசுப் பள்ளி மாணவிகள் கல்லூரியில் சேர்வது குறைந்து கொண்டே வந்தது. படிப்புக்குப் பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று உருவாக்கிய திட்டம் தான், இந்தத் திட்டம்!**

**இந்தத் திட்டம் வந்த பிறகு, பெண்கள் கல்லூரியில் சேருவது 34 விழுக்காடு அதிகரித்திருப்பதாக ஆய்வு முடிவுகள் வந்திருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு படிப்பை முடித்த பெண்கள்கூட, இந்தத் திட்டத்தால் திரும்பப் படிக்க வந்திருக்கிறார்கள்.**

**’கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ நிகழ்ச்சியில், இதுபோன்று திருமணத்திற்குப் பிறகு திரும்பப் படிக்க வந்த ஒரு பெண், இந்தத் திட்டத்தின் பயனை உணர்ச்சி பொங்க பேசினார். மேத்ஸ் டீச்சர் ஆக வேண்டும் என்று இதன் மூலமாக படித்து முன்னேறிய பிறகு அந்த பெண் பேசினார். நான் அந்த அன்பு மகளை அழைத்து, உச்சிமுகர்ந்து பாராட்டி, உச்சந்தலையில் முத்தம் கொடுத்து, என்னுடைய பேனாவை எடுத்து அன்பளிப்பாகக் கொடுத்தேன். அந்தக் காட்சி தமிழ்நாட்டு மக்கள் நெஞ்சத்தில் நீங்காமல் பதிந்துவிட்டது. இதுதான் புதுமைப்பெண் திட்டத்தின் வெற்றிக்குச் சான்று! பெண்களுக்குக் கணவனை விட, கல்விதான் பெருந்துணை என காட்டியிருக்கும் திட்டம்தான், புதுமைப்பெண் திட்டம்!**

**பெண்களின் பாதுகாப்புக்கு தோழி விடுதிகள் திறப்பு!**

அடுத்து, திராவிட மாடல் 2.0ஆட்சியில் இனி மாதம் ஆயிரத்து 500 ரூபாயாக, உயரப் போகிறது!

அடுத்து, என் மனதிற்கு நெருக்கமான திட்டம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்! 19 இலட்சம் குழந்தைகளுக்குக் காலையில் சுவையான, சத்தான உணவை வழங்கும் திட்டம்! 19 இலட்சம் தாய்மார்களின் சமையல் சுமையைக் குறைக்கும் திட்டமாக இது அமைந்திருக்கிறது! இதனால், காலையில் அரக்கப் பரக்க எழுந்து சமைக்கத் தேவையில்லாமல், ஒரு அரைமணி நேரம் அவர்கள் கூடுதலாகத் தூங்குவதற்கு இந்தத் திட்டம் பயன்படுகிறது! மனசாட்சியைத் தொட்டு சொல்லுங்கள்... இது உண்மையா... இல்லையா? ஆமாம் (மகளிர்). “ஸ்டாலின் அண்ணனே ஸ்கூலில் சாப்பாடு போடுகிறார்” என அவர்கள் நிம்மதியாகப் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். இதைவிட எனக்கு வேறு என்ன மகிழ்ச்சி வேண்டும்?

அதேபோன்று, வெளியூர்களில் வேலைகளுக்குச் செல்லும் பெண்கள், அங்கே பாதுகாப்பாக வசதியுடன் தங்குவதற்காக நாம் தொடங்கியிருக்கும் தோழி விடுதிகள்! 19 மாவட்டத்தில் திறந்துவிட்டோம். திராவிட மாடல் 2.0 ஆட்சியில் அனைத்து மாவட்டத்திலும் திறக்கப் போகிறோம். ஒன்றிய அரசே இந்தத் திட்டத்தைப் பாராட்டி, அவர்களும் செயல்படுத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதுதான் இதன் மிகப்பெரிய வெற்றி!

இதுபோக, தமிழ்நாட்டில் எந்தக் கம்பெனி தொழில் தொடங்கினாலும், பெண்களுக்கு இதனால் எவ்வளவு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றுதான் நான் முதலில் கேட்பேன். பெண்களுக்கு அதிக வேலைகள் கொடுத்தால் அந்தக் கம்பெனிகளுக்கு அரசு சார்பாகக் கூடுதல் சலுகையும் கொடுக்கிறோம்.

இந்தியாவிலேயே முதல் மாநிலமாகப் பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்து, பெரியார், அம்பேத்கர் கனவை நிறைவேற்றிய ஆட்சி தி.மு.க. ஆட்சி; அதைச் செய்தவர் கலைஞர். அவர் வழியில், பெண்கள் பெயரில் சொத்துப் பதிவு செய்தால் அதற்கும் கட்டணச் சலுகை அறிவித்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இப்போது இந்தியா முழுவதும் பேசுபொருளாக இருக்கும் இன்னுமொரு திட்டம்; 14 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகளுக்குக் கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டம். 28 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தடுப்பூசிகளை என் மகள்களுக்காகக் கட்டணமில்லாமல் வழங்கச் சொல்லிவிட்டேன்.

**பெண்களின் உரிமைக்காக செயல்படும் நமது அரசு!**

இப்படி, முழுக்க முழுக்கப் பெண்களுக்காகவே பெண்களின் உரிமைகளுக்காகவே செயல்படும் நம்முடைய அரசு. நான் உறுதியாக சொல்கிறேன். இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி எப்போதும் பெண்களின் நலனுக்கான ஆட்சி.

நம்மைப் பார்த்து, “பெண்களுக்கான இட ஒதுக்கீடு வரும் நேரத்தில் ஏதோ சதி செய்கிறார்கள். தி.மு.க.வுக்குப் பிடிக்கவில்லை” எனப் பழனிசாமி பேசியிருக்கிறார்.

33 பர்செண்ட் இட ஒதுக்கீடு என்றால் என்ன என்பது, பழனிசாமிக்குத் தெரியும் முன்பே, உள்ளாட்சிகளில் அதைச் செயல்படுத்தியவர் நம்முடைய தலைவர் கலைஞர்! இப்போது அதை 50 விழுக்காடாக நடைமுறைப்படுத்தியவன்தான், உங்கள் முன்னால் நிற்கும் இந்த ஸ்டாலின்!

சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 விழுக்காடு வேண்டும் என்று பல ஆண்டுகாலமாகத் தி.மு.க. போராடி வருகிறது. பா.ஜ.க. நினைத்தால் அதை எப்போதோ கொண்டு வந்திருக்கலாம். நாங்களும் அதைத்தான் கேட்கிறோம். ஆனால், தேவையே இல்லாமல் சென்சஸ், தொகுதி மறுவரையறை என, சம்பந்தம் இல்லாத விஷயங்களோடு அதை முடிச்சுப் போட்டு, அது நிறைவேறக் கூடாது என்று பா.ஜ.க. நினைக்கிறது.

**பா.ஜ.க. வின் அலங்கோலச் சட்டம்! கோலம் மூலமாகவும் எதிர்ப்பைத் தெரிவியுங்கள்!**

மிஸ்டர் பழனிசாமி! முதலில் புரிந்து கொள்ளுங்கள். இங்கே பிரச்சினை பெண்கள் இட ஒதுக்கீடு அல்ல! அதை அனைவருமே வரவேற்கிறோம்! தொகுதி மறுவரையறைதான் இங்கே பிரச்சினை! தமிழ்நாடே கொதித்துப் போயிருக்கிறது. நாளைக்கு அனைவர் வீட்டிலும் கருப்புக் கொடி ஏற்றப் போகிறோம்! பெண்கள் எல்லாம் பா.ஜ.க.வின் இந்த அலங்கோலச் சட்டத்திற்கு காலையில் வீட்டின் வாசலில் கோலம் மூலமாகவே எதிர்ப்புத் தெரிவிக்கப் போகிறீர்களா? இல்லையா? ஆமாம் (பெண்கள்)! இதில் அரசியல் வேறுபாடுகளுக்கு இடமே இல்லை. ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது.

எடப்பாடி அவர்களே... கடைசி வரை கோழையாக - அடிமையாக இருந்தால், தமிழ்நாட்டின் களங்கமாகத்தான் வரலாற்றில் நீங்கள் நினைவு கூரப்படுவீர்கள்! இது வரலாறு உங்களுக்குக் கொடுத்திருக்கும் கடைசி வாய்ப்பு! ஒரு முறை ஒரே ஒரு முறையாவது பா.ஜ.க.வை எதிர்த்துத் தைரியமாகப் பேசுங்கள். உறுதியான எஃகுக்கு பெயர் பெற்ற ஊர் இந்த சேலம்! இப்படிப்பட்ட பெருமைமிகு ஊரில் பிறந்துவிட்டு, ஏன் டெல்லிக்கு முதுகு வளைந்தே இருக்கிறீர்கள்? வெட்கமாக இல்லையா? பக்கத்தில் இருக்கும் கேரளா, தெலங்கானா, கர்நாடகா போன்ற மாநிலங்கள்கூட அவர்கள் மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறார்கள். கட்சி வேறுபாடுகளை மறந்து ஒரே குரலில் பேசுகிறார்கள். நீங்கள் தமிழன்தானே? தமிழனாக இருந்துவிட்டுத் தமிழ்நாட்டுக்கு இப்படித் துரோகம் செய்யலாமா?

**பழனிசாமியின் துரோகத்துக்கு மே 4 ல் தண்டனை கிடைக்கும்!**

உங்கள் துரோகங்களுக்குத் தண்டனை மே 4 அன்று கிடைக்கத்தான் போகிறது! ஒட்டுமொத்தப் பெண்களின் ஆதரவோடு தி.மு.க. மீண்டும் ஆட்சியமைக்கத்தான் போகிறது! அதற்கான ஒத்திகைதான் நான் வெளியிட்டிருக்கும் தி.மு.க. தேர்தல் அறிக்கை! இந்தத் தேர்தலின் சூப்பர்ஸ்டார் இதுதான்! இப்போது நம்முடைய சூப்பர்ஸ்டாரின் சூப்பர் ஹிட் அறிவிப்புகளைச் சொல்லவா?

**முதலில், இல்லத்தரசி திட்டம்! இந்த ஒரு அறிவிப்பிலேயே நம்முடைய எதிரிகள் எல்லாம் க்ளோஸ் ஆகிவிட்டார்கள். எட்டாயிரம் ரூபாய்க்கு நாம் தரப்போகும் இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருளை வாங்கிக் கொள்ளலாம்! வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோவேவ் அவன், இண்டக்ஷன் ஸ்டவ் இவற்றில் எதை வாங்கலாம் என்று இப்போதே பெண்கள் எல்லாம் டிஸ்கஸ் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். வீட்டுக்காரரிடம் எல்லாம் கேட்காதீர்கள். அவர்கள் உங்களை குழப்பிவிடுவார்கள். எதாவது பிரச்சினை என்றால், “அண்ணனிடம் சொல்லிவிடுவேன்” என்று சொல்லிவிடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். இது முழுக்க முழுக்க உங்களுக்காக கொண்டு வந்திருக்கும் திட்டம்! பெண்கள்தான் டிசைட் பண்ண வேண்டும்! பெண்களின் வீட்டு வேலைச் சுமையைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவே நான் அறிவித்திருக்கும் திட்டம் இது!**

**இப்போதே பெண்கள் அனைவரும் கணக்குப் போட ஆரம்பித்துவிட்டார்கள். என்ன கணக்கு? பொங்கலுக்கு முன்பு, சொல்லிவிட்டு 3 ஆயிரம்! பிப்ரவரியில், சொல்லாமலேயே 5 ஆயிரம்! ஆக மொத்தம் 8 ஆயிரம்! அடுத்து, இல்லத்தரசி கூப்பனிலும் ஸ்டாலின் அண்ணன் 8 ஆயிரம் கொடுக்கிறார். ஆகமொத்தத்தில், “எட்டு + எட்டு! உதயசூரியனுக்குத்தான் எங்க ஓட்டு” என முடிவெடுத்துவிட்டார்கள்.**

இதுமட்டுமல்லாமல், பெண்கள் வேலைக்கு செல்வதை எளிதாக்க ஆயிரம் குழந்தைகள் காப்பகம் உருவாக்கப் போகிறோம்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளிட்ட மகளிருக்கான திட்டங்கள் பெருமளவு தேர்தல் அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இப்போது சொல்லுங்கள்? பெண்கள் அனைவரும் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குத்தானே வாக்களிப்பீர்கள்? சத்தமாக! எடப்பாடி வரை கேட்க வேண்டும்! கடந்த சட்டமன்றத் தேர்தலில், சேலத்தில் நான் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. அதில் மறைக்க எதுவும் இல்லை! அதற்காக, ஒன்றிய பா.ஜ.க. அரசு போன்று, திராவிட மாடல் அரசு சேலத்தைப் புறக்கணிக்கவில்லை. திட்டங்களை வாரித் தந்தோம். அதனால்தான், 2024 நாடாளுமன்றத் தேர்தலில், மிகப்பெரிய வெற்றியைச் சேலம் மக்களான நீங்கள் வழங்கினீர்கள். அது 2026இலும் தொடர வேண்டும்!

**தமிழ்நாடு வெல்லும்! வெல்வோம் ஒன்றாக!**

அதற்கு இங்கே மேடையில் இருக்கும் 11 வேட்பாளர்களுக்கும் அவரவருக்குரிய சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்!

தமிழ்நாடா? டெல்லியா? என்ற இந்த ஜனநாயகப் போரில், தமிழ்நாடு அணிதான் வெல்ல வேண்டும்! தமிழ்நாட்டைக் காக்கக் கழகம்தான் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும்.

நாடு நலம் பெற நல்லாட்சி தொடர்ந்திட, ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை!

தமிழ்நாடு போராடும்!
தமிழ்நாடு வெல்லும்!
வெல்வோம் ஒன்றாக!
வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.